DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC. No.51 /2018**

| | |
|---|---|
| Deposition of witness for | : PW7 |
| Name | : ஜமால் |
| Father's / Husband's Name | : அசேன் |
| Age | : 30 |
| Religion | : முஸ்லீம் |
| Calling | : கூலிவேலை |
| Caste | : - |
| Village | : வாலாஜா |
| Date | : 17.12.2019 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் வாலாஜாவில் வசித்து வருகிறேன். 24.10.2015 அன்று மாலை 4.30 டு 5.00 மணியளவில் சில்வர் கலர் இண்டிகா கார் வாலாஜா பஸ் ஸ்டான்டில் வேகமாக வந்தது அப்போது சிவக்குமார் என்பவர் வைபர் பிடித்துக்கொண்டு பேனட்டின் மீது மேலே உட்கார்ந்துகொண்டார். அதன் பிறகு கார் சென்னை நோக்கி வேகமாக போய் விட்டது அதன் பிறகு நான் வீட்டிற்கு வந்துவிட்டேன். மீண்டும் நான் காந்தி நகர் விஷ்ணு மஹால் எதிரில் உள்ள டீக்கடைக்கு சென்றபோது ஆறுமுகம் மகள் லாவண்யா என்பவரை காரில் அந்த பெண்ணை அழைத்துச்சென்றதாகவும் அதன் பிறகு அந்த காரானது வேலூர் பக்கம் சென்றதாகவும் ரத்தினகிரி அருகில் சிவக்குமார் என்பவர் காரில் இருந்து விழுந்து அடிப்பட்டு இறந்துவிட்டார் என்று கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC. No.51 /2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW8 |
| Name | : | தாமோதரன் |
| Father's / Husband's Name | : | கங்காதரன் |
| Age | : | 24 |
| Religion | : | இந்து |
| Calling | : | ஆட்டோ டிரைவர் |
| Caste | : | யாதவ் |
| Village | : | வாலாஜா |
| Date | : | 17.12.2019 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் வாலாஜாவில் வசித்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுகிறேன். சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு மாலை 5.00 மணியளவில் வாலாஜா பஸ் ஸ்டாண்டு ஆட்டோ ஸ்டாண்டில் நின்றுகொண்டிருந்தோம். அப்போது அந்த இடத்தில் ஒருவர் இருச்சக்கர வாகனத்தில் வந்தவர் திடீரென்று அந்த வழியாக காரின் முன்பக்கத்தில் ஏறிஉட்கார்ந்தார். பின்னர் அந்த கார் சென்னை நோக்கி வேகமாக சென்று விட்டது. அதற்கு பின்பு என்ன நடந்தது என்று தெரியாது. போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET

**SC. No.51 /2018**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | PW9 |
| Name | : | கவிதா |
| Father's / Husband's Name | : | ஆறுமுகம் |
| Age | : | 42 |
| Religion | : | இந்து |
| Calling | : | - |
| Caste | : | முதலியார் |
| Village | : | வாலாஜா |
| Date | : | 17.12.2019 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் வாலாஜாவில் வசித்து வருகிறேன். இந்த வழக்கில் இறந்தபோன சிவக்குமார் என் மைத்துனர். அ.சா.1 ஆறுமுகம் என் கணவர். ஆஜர் எதிரிகளில் முதலில் நிற்பவர் கார்த்திக்கை மட்டும் தெரியும். மற்ற எதிரிகளை தெரியாது. 24.10.2015 அன்று மாலை 4.30 டூ 5.00 மணியளவில் லாவண்யா வீட்டை விட்டு இறங்கி பின்வாசல் வழியாக செல்லும் போது நான் பார்த்தேன். அப்போது லாவண்யா பின்பக்கத்தில் நின்றிருந்த காரின் உள்ளே சென்றதை பார்த்தேன். பின்னர் கார் சென்றுவிட்டது. நான் சத்தம்போட்டேன். பின்னர் அவரவர்கள் வண்டியை எடுத்து காரை துரத்திக்கொண்டு சென்றார்கள். என் கணவர் பக்கத்தில் இருந்துகொண்டு பெண்ணை காப்பாற்றுங்கள் என்று கத்தினார். பின்னர் என் கணவர் எங்கள் காரை எடுத்துக்கொண்டு லாவண்யா சென்ற காரை விரட்டலாம் என்று முடிவு செய்து காரை எடுக்கப்போனபோது டிரைவர் காரை எடுக்க மறுத்துவிட்டதால் நாங்கள் வேறு காரை வாடகைக்கு எடுத்து அந்த காரை

விரட்டி சென்றோம். போகும் வழியில் என் மைத்துனர் சிவக்குமார் காரிலிருந்து கீழே விழுந்து இறந்துவிட்டதாக கேள்விப்பட்டோம். வாலாஜா அரசு மருத்துவமனைக்கு சிவக்குமாரை ஆம்புலன்ஸ் மூலம் கொண்டுவந்ததாகவும் அப்போது சிவக்குமார் இறந்துவிட்டதாக சொன்னதாக கேள்விப்பட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை இல்லை.**